**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 12/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-4/Lw-5 |
| Name | : | Mr. Mohanraj |
| Father Name | : | subramaniyam |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் மணியக்கார பாளையத்தில் வசித்து வந்து பிளம்பர் ஆக உள்ளேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகள் நான்கு நபர்களையும் நான் பார்த்ததில்லை. 2022 ஆம் வருடம் ஒரு நாள் கார்த்தி யுவராஜ் உடன் சண்டை போட்டுக் கொண்டதாகச் சொன்னார்கள் மணியக்கார பாளையம் மதுக்கடை முன்பு சண்டை போட்டதாக சொன்னார்கள். இடம் வாங்கி தருவதாக கார்த்திக் இடம் யுவராஜ் பணம்

வாங்கி இருந்தார். மற்றவர்கள் விவரம் தெரியாது. அதை பொறுத்து பிரச்சனை என்று சொன்னார்கள். இதை பொறுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.12 18:37:08 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

## DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 12/2023**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-5/Lw-9 |
| Name | : | Mr. பிரகாஷ் |
| Father Name | : | ஜெகதீஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025.

**எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்**

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்சமயம் மண்ணரை பாரப்பாளையத்தில் வசித்து வந்து. Fashion process தனியார் நிறுவனத்தில் supervisor ஆக பணிபுரிகிறேன். 21.12.2021 ம் தேதி வழக்கம்போல் என்னுடைய பணிக்கு 6.00 மணிக்கு வந்த போது போலீசார் எங்களுடைய கம்பெனி கேட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். 4 நபர்கள் சண்டை போட்டுக் கொண்டதாக சொன்னார்கள். சம்பவம் 20.12.2021 ம் தேதி இரவு நடந்ததாக சொன்னார்கள். சம்பவம் நடந்த இடத்தை வரைபடம் தயாரித்தார்கள். வரைபடம் வரைந்தபோது நானும், தினகரனும் இருந்தோம்.வரைபடம் வரைந்தபிறகு கம்பெனி கேட்டிற்கு முன் வைத்து அதில் நான் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளேன். இரண்டாவது கையொப்பம்

தினகரனுடையது. பார்வை மகஜர் **அ.சா.ஆ– 3.** அந்த ஆவணத்தில் வரைபடம் வரைந்ததை பொறுத்து சம்பவம் நடந்ததை பொறுத்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு கையொப்பம் பெற்றார்கள். போலீசார் வழக்கு போட்டு விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு என் முன்னிலையில் எங்களுடைய கம்பெனி கேட்டிற்கு முன்பு போலீசார் விசாரணை செய்ததை வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் தவறு. பார்வை மகஜரில் நான் சம்பவம் இடத்தில் கையொப்பம் செய்யவில்லை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் தவறு. என்னுடைய அன்றாட பணியின் நேரம் என்ன என்றால் காலை 9,00 மணி முதல் இரவு 9.00 மணி வரை. சில சமயங்களில் 7 முதல் 8 மணி வரை வருவோம். பார்வை மகஜரில் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனறால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.